**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-8366

Volume: 9

Issue: 2

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.07.2024

Accepted: 25.07.2024

Published: 01.10.2024

Citation:
Anna Packiyam, V. "Towards Futurism '3000 AD.'" *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 2, 2024, pp. 55–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8366

*Corresponding Author:
ritchia08@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Towards Futurism "3000 AD"

**V. Anna Packiyam**
*Assistant Professor, Department of Tamil*
*The Standard Fireworks Rajaratnam College for Women (Autonomous)*
*Sivakasi, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0002-5911-7134*

**Abstract**

*Time can be divided into three categories: past, present and future. What happened in the past can be learned through literature or by listening to others. What is happening in the present can be known through experience. But we have no chance of knowing what will happen in the future, how it will happen, and where it will happen. But poets are recording in their works what the world will be like in the future and how it is going to be. The purpose of this article is to examine the poem "AD 3000" by the poet Pandu, which was written with a future in mind.*

***Keywords:*** *AD 3000, Future in the World, Future in the Mind.*

**References**

1. Kanthakakavi Pandu. 2015. *Ettukalium Erukalium*, Sivakasi, Kanthakappookal Pathippagam.
2. Sivakami, S. 2001. *Futurism in Tamil Literature*, Chennai, International Institute of Tamil Studies.
3. Dr. Murali Krishnan, R. Research article, https://www.sjctni.edu/retell/content/2018_murali_10-12-2019_10.pdf
4. Dr. Manavazhan, A. Research article, https://thamizhiyal.com/?p=2765
5. Dr. Vigneswari, P. Research article, https://www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/5745-2020-03-21-23-22-39

# எதிர்காலவியல் நோக்கில் கி.பி.3000

***முனைவர் வி. அன்னபாக்கியம்***
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

**ஆய்வுச்சுருக்கம்**
*காலத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம். கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை இலக்கியத்தின் மூலமாகவோ அல்லது பிறர் சொல்வதைக் கேட்டோ அறிந்து கொள்ளலாம். நிகழ்காலத்தில் என்ன நடக்கிறது என்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம். ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும், எப்படி நடக்கும், எங்கு நடக்கும் என்பதை நாம் அறிய வாய்ப்பில்லை. ஆனால் எதிர்காலத்தில் உலகம் எப்படி இருக்கும், எப்படி இருக்கப் போகிறது என்பதை கவிஞர்கள் தங்கள் படைப்புகளில் பதிவு செய்கிறார்கள். கவிஞர் பாண்டுவின் “கி.பி. 3000” என்ற கவிதை எதிர்காலத்தை மனதில் கொண்டு எழுதப்பட்டுள்ளதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*
***திறவுச்சொற்கள்:*** *கி.பி.3000, எதிர்கால உலகம், எதிர்காலச் சிந்தனைகள்*

## எதிர்கால உலகம் அல்லது எதிர்காலச் சமுதாயம்

எதிர்காலவியலின் அடிப்படை நோக்கம் மனித சமுதாய முன்னேற்றம் ஆகும். எப்படியிருந்தது, எப்படி இருக்கிறது என்பதைச் சமுதாயம் காட்ட, எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்பதனை விளக்குவதாக அமைவது எதிர்கால உலகம் அல்லது எதிர்காலச் சமுதாயம் பற்றிய சிந்தனையாகும்.

நடந்ததை வரலாற்றியல் விரித்துரைக்க, எதிர்காலவியல் நடக்க இருப்பனவற்றிக்கு வரலாறு காண்கிறது[1] எனச் சுட்டுவர்.

மாற்றம் என்பது இயற்கை. அது அனைத்துத் துறைகளுக்கும் பொதுவானது. அதனை அறிவியல் தொழில் நுட்பம் விரைவுபடுத்துகிறது. இதனை எதிர்கால ஆய்வின் முக்கியப் பார்வை, நாளுக்கு நாள் பெருகி வரும் அறிவியல், தொழில் நுட்பச் சாதனைகளை நோக்கியே உள்ளது. ஏனெனில் தொழில் நுட்பத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு முன்னேற்றமும் சமுதாயத்தைப் போய்ச் சேருகிறது. அதனால், பல நல்ல அல்லது கெட்ட விளைவுகள் உண்டாகின்றன[2] எனவும் சுட்டுவர்.

## கி.பி. 3000 கவிதையில் உள்ள எதிர்காலச் சிந்தனைகள்

கவிஞர் பாண்டு அவர்கள் சிந்தனையிலும் கவிதை எழுதுவதிலும் சிறந்தவர். மரபு மற்றும் புதுகவிதைகளில் மட்டுமல்ல. உருவக, குறியீடு, படிமக் கவிதைகளிலும் ஆளுகையைச் செலுத்தி வருகிறார். இவருடைய மூன்றாவது கவிதை நூலான எட்டுக்காலியும் இருகாலியும் என்ற கவிதைத் தொகுப்பில் கி.பி. 3000 என்ற கவிதை இடம்பெற்றுள்ளது.

தமிழகம் - இந்தியா - உலகம் என்று கொஞ்சம் கொஞ்சமாக அகன்ற பார்வையை வைத்திருக்கும் கவிஞர் பாண்டு கி.பி.3000-இல் இந்த உலகம் மாறப் போகின்ற சூழலைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். உழைப்பதற்கு அச்சப்படும் சோம்பேறிகள் நிறைந்த உலகமாக இந்த உலகம் மாறிவருகிறது என்பதை வருத்தத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் இக்கவிதையில் பதிவு செய்துள்ளார்.

கி.பி.3000 கவிதையில் உள்ள எதிர்கால உலகம் பற்றிய சிந்தனைகள் பின்வருமாறு,

1. இயற்கை பற்றிய அறிமுகமின்மை
2. குடிநீர்

3. காற்று மாசு
4. உணவில் மாற்றம்
5. இறை வழிபாட்டில் மாற்றம்
6. வரலாற்றில் மாற்றம்
7. தொழிலில் மாற்றம்
8. குடும்பக் கட்டுப்பாடு
9. ஆட்சி மாற்றமும் அடிமைத்தனமும்.

**இயற்கை பற்றிய அறிமுகமின்மை**

இன்றைய தலைமுறையினர் புதியன கற்றுக் கொண்டாலும் இழந்து வருபவை என்னவோ ஏராளம். புளி என்றவுடன் அதன் புளிப்புச்சுவை நாவில் தெரியும். ஆனால் எதிர்காலத்தில் புளியம்பழத்தின் சுவையைக்கூட கூகுள் இணையம் வழியாகத்தான் தெரிந்து கொள்வர்.

***புளியம்பழம்***
***புளிக்குமா? இனிக்குமா?***
***கூகுளில் தேடப்படும்! (எ. இ. ப. 62)***

பனை என்பது ஒரு மரம் மட்டுமல்ல அது தமிழரின் அடையாளம் ஆகும். சங்க காலம் முதல் தமிழரின் வாழ்வில் பனைமரம் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. பனைமரத்தின் அனைத்துப் பாகங்களும் அதன் அனைத்துப் பருவங்களிலும் கிடைக்கும் பொருள்களும் பயன்மிக்கவை. இத்தகைய பனைமரம் எப்படி இருக்கும் என அதன் அடையாளத்தை எதிர்காலத்தில் புதிய தலைமுறையினர் டுவிட்டர் மூலமாகத் தெரிந்துகொள்ளுவர்.

***பனைமரம் எனும் சொல்லை***
***டுவிட்டரில் காணின்***
***கிளைகளோடு கூடிய மரமொன்று***
***அவர்தம் மனக்காட்சியில் விரியும்!***
***(எ. இ. ப. 62)***

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பது பழமொழி. ஆலமரக் குச்சியையும் வேலமரக் குச்சியையும் பற்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தினால் பல்லும் ஈறும் வலிமையுடன் இருக்கும் என்பதால் நம் முன்னோர்கள் பல் துலக்கப் பயன்படுத்தினர். ஆனால் இதன் பயன் அறியாதவர்கள்,

***பல்செட் கிழமும் ஆலும் வேலும்***
***யாதென வினவும்! (எ. இ. ப. 62)***

என எதிர்காலத்தில் பற்களை இழந்து, செயற்கையான பல்செட் பயன்படுத்துவோர் ஆலும் வேலும் என்றால் என்ன? என்று வினவும் நிலை ஏற்படும். அதாவது புதிய தலைமுறையினர்அவர்களையும்அறியாமல் இழந்து வரும் அடையாளங்களை இங்குச் சுட்டிக் காட்டியுள்ளார். நம் அடையாளங்களை அறியாமல் உணராமல் வளர்ந்து வருபவர்களாக இன்றைய தலைமுறைக் குழந்தைகள் இருப்பதை அறிய முடிகிறது.

**குடிநீர்**

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குச் சுத்தமான நீர், காற்று, நிலம் அவசியம். உலகத்தின் இயக்கம் தண்ணீரையே அடிப்படையாகக் கொண்டது. கவிஞர் தண்ணீர் எதிர்காலத்தில் தனியார்மயமாக்கப்படும் என்றும் மக்களின் தேவைக்குரிய தண்ணீர் காசுக்கு விற்கப்படும் என்பதையும் சிந்தனை செய்கிறார். இன்றே அந்நிலையை நாம் காணமுடிகிறது.

***டாப் அப் மூலம்***
***குடிநீர் ரீஃபில் செய்யப்படும்!***
***நதிகள் இணைக்கப்படும்***
***அதன் நீர் காசாக்கப்படும்!***
***(எ.இ., ப. 63 - 65)***

இன்று நாம் பயன்படுத்தும் அலைபேசியில் பேசுவதற்கு டாப் அப் செய்வது எவ்வளவு அவசியமோ அதேபோல எதிர்காலத்தில் மக்கள் குடிப்பதற்கான நீரை விலை (டாப்-அப்) கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்கிறார். ஏற்கனவே தென்னாப்பிக்காவில் தண்ணீர் தனியார்மயமாக்கப்பட்டது. அதன் விளைவாக அக்கவுன்ட்டில் பணம் இருக்கும் வரை குழாயில் தண்ணீர் வரும். அக்கவுன்ட்டில் பேலன்ஸ் தீர்ந்துவிட்டால் தண்ணீர் பாதியில் நின்றுவிடும். அடுத்து எப்போது டாப்-அப் செய்கிறீர்களோ அப்போதுதான் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படும்.

### காற்று மாசு

புவியின் உயிர் மண்டலமானது வளிமண்டலம் (காற்று), நீர் மண்டலம், பாறை மண்டலம் ஆகியவற்றால் ஆனது. அதில் காற்று மண்டலம் இன்று மாசுபட்டு வருகின்றது. காற்றின் மாசுபாட்டினால் என்ன நிகழும் என்பதை ஆசிரியர் சிந்தனை செய்கிறார்.

**மானிய விலையில் ஆக்சிஜன் சிலிண்டர்**
**மாதந்தோறும் வீடுவரும்! (எ. இ. ப. 63)**

நிகழ்காலத்தில் மனிதர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் பெருக்கம் ஒருபக்கம் இருந்தாலும் இன்று மனிதர்கள் இயற்கைக்கு எதிரியாக நடந்துகொள்ளும் செயல்களினால் காற்று மண்டலம் மாசுபட்டுப் புகை மண்டலமாக மாறிவருகின்றது. எனவே எதிர்கால மக்கள் சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்றுக் கிடைப்பது அரிது.

சிறிது காலத்திற்கு முன்பு டெல்லியைச் சூழ்ந்துள்ள காற்று மாசினால் அங்குள்ள மக்கள் காசு கொடுத்துக் காற்றைச் சுவாசிக்கும் நிலை ஏற்பட்டது. அவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்நிலையில் அங்கு புதிதாக ஆக்ஸிஜன் மையங்கள் திறக்கப்பட்டு சுத்தமான காற்று விநியோகிக்கப்பட்டது. ஆக்சிபியுர் என்ற பெயரில் இயங்கி வரும் இந்த மையம் வாடிக்கையாளர்களுக்கு டியுப் வழியாக ஆக்சிஜன் கொடுத்தது. அழகு நிலையம் போன்று அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பிடித்த ஃபிளேவரில் காற்றைச் சுவாசிப்பதற்கான வசதியும் செய்திருந்தனர்.

இதேபோல சீனாவில் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்காகவே ஏர்-பார்கள் திறக்கப்பட்டு, வருவாய் ஈட்டும் தொழிலாகவே நடைபெற்று வருகிறது. இந்தியாவிலும் காற்று மாசுபட்ட நிலையில் இருப்பதால் சுத்தமான காற்றைத் தருவதற்கான ஏர் பியுரிபையர் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. சீனாவைச் சேர்ந்த செல்போன் நிறுவனமான ஜியோமி இதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதை நாளிதழ்கள் பகிர்ந்துள்ளன.

### உணவில் மாற்றம்

மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான ஆதாரத் தேவைகளுள் உணவு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. எதிர்காலத்தில் உணவுப் பழக்கவழக்கத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் என்பதை,

**பசு கரவா பால் பாத்திரத்தில் பொங்கும்!**
**அரிசிச் சோறு அதிசயமாய் மாறும்!**
**அவசியச் சாப்பாடாய் ஓட்ஸ் திணிக்கப்பட்டிருக்கும்!**
**முக்கனிகள் அருங்காட்சிகளில் பார்வைக்கு**
**மட்டும் விருந்தளிக்கும்!**
**(எ. இ. ப. 63)**

என்கிறார். உணவுப்பொருட்கள் பெரும்பாலும் செயற்கை பொருட்களாகவே கிடைக்கும். நம்நாட்டு பாரம்பரிய உணவாகிய அரிசிச்சோறு நமக்கு அதிசயமாய் தோன்றும். பிறநாட்டு உணவாகிய ஓட்ஸ் நமக்கு உணவாகும் நிலை ஏற்படும் என்கிறார். இந்த உணவு எதிர்காலத்தில் மாத்திரை வடிவில் பயன்படுத்தப்படும் என்பதைச் சுஜாதா பதிவுசெய்துள்ளார்.

### இறை வழிபாட்டில் மாற்றம்

இறை வழிபாடு என்பது சமயங்களுக்குச் சமயம் வேறுபடக்கூடியவை. அந்தந்தச் சமய வேதநூல்களில் சொல்லப்பட்டுள்ள முறைப்படி இதனைப் பின்பற்றுவது வழக்கம். அந்த வகையில் அவரவர் புனித ஸ்தலங்களுக்கு நேரடியாகச் சென்று இறைவனை வழிபடுவது வழக்கம். ஆனால் எதிர்காலத்தில் ஆண்டவனை ஆன்லைனிலேயே தரிசிக்கும் நிலை ஏற்படும் என்பதை,

**ஆடியில் அம்மனுக்கு**
**பீட்சா பர்கர் படையல்!**
**ஆன் லைனில் ஆண்டவனுக்கு**
**அபிசேக ஆராதனை!**
**கேஸ் ஆன் டெலிவரியில்**
**பக்தருக்குப் பிரசாதம்! (எ. இ. ப. 63)**

என்கிறார். இறைவன் சந்நிதிக்குச் சென்று வழிபடுவதற்குப் பதிலாக ஆன்லைனில் காணொலிக் காட்சிகள் வாயிலாக வழிபடும்

நிலை ஏற்படும் என்கிறார். இப்போதே இந்த நிலையை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. கி.பி. 3000 வரை காத்திருக்க வேண்டியதில்லை.

### வரலாற்றில் மாற்றம்

ஒரு நாட்டின் அமைப்பினை அந்தந்த நாட்டின் வரைபடத்தின் வாயிலாக அறியமுடியும். அந்த வரைபடத்தில் குன்றுகளுக்கும் மலைகளுக்கும் இடமுண்டு. அந்தந்த நாட்டில் உள்ள குன்றுகளும் மலைகளும் நல்ல வளம் மிக்கவையாய் நாட்டிற்கு இயற்கை அரண்களாய் நாட்டிற்கு மழை வளம் பெற்றுத் தரக்கூடியவையாய் இருக்கும். ஆனால் எதிர்காலத்தில்,

**குன்றிருக்கும் இடமெல்லாம்**
**குண்டுச் சத்தம் கேட்கும்!**
**மேற்குத் தொடர்ச்சி மலை**
**மேப்பிலிருந்தே மறையும்!**
**பிளாட்டினம் பதினாறு சாலைகள்**
**பளபளப்பாய் மின்னி விரியும்!**

**(எ. இ. ப. 64)**

என நாட்டில் தீவிரவாதமும் சுரண்டலும் தலைவிரித்தாடும் தன்மையினைச் சுட்டிக் காட்டியுள்ளார். இயற்கையாய் அமைந்துள்ள காடுகளும் மலைகளும் வயல்களும் அழிக்கப்பட்டு நான்குவழி, எட்டுவழி, பதினாறு வழிச்சாலையாக மாறும் தன்மையைத் தற்காலத்திலேயே காணமுடிகிறது.

### தொழிலில் மாற்றம்

நாட்டில் அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றாற்போல வருமானம் ஈட்டுவதைத் தொழில் எனலாம். நம் நாட்டில் அதிகமான இடங்களில் நடைபாதைக் கடைகள், கையேந்தி பவன்கள் அநேகம் உண்டு. இதைத்தவிர சூப்பர் மார்க்கெட்டுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆனால் எதிர்காலத்தில்,

**நடைபாதைக் கடைகள் நடையைக் கட்டும்!**
**கையேந்திபவன்கள் கை கழுவப்படும்!**
**பெட்டிக்கடைகள் பேக் அப் ஆகும்!**
**சூப்பர் மார்க்கட்டை சூதுகள் கவ்வும்!**
**மால்கள் மட்டுமே முளைத்துச் செழித்துக்**
**கிளைகள் பரப்பும்! (எ. இ. ப. 64)**

எனச் சிறு, குறு தொழில்கள் அனைத்தும் நலிவடைந்து ஓரங்கட்டப்பட்டு, மால்கள் மட்டுமே எல்லா இடங்களிலும் தம் கிளைகளைப் பரப்பி நிற்கும். நடைபாதைக் கடைக்காரரும் கையேந்தி பவன் நடத்து பவரும் நசுக்கப்படுவதை இக்கவிதை வரிகள் எடுத்துரைக்கின்றன.

### குடும்பக்கட்டுப்பாடு

பெருகி வரும் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த இன்றும் அரசாங்கம் பலவழிகளில் முயன்று வருகின்றது. "நாம் இருவர் நமக்கு இருவர்" என்ற நிலை மாறி, "நாம் இருவர் நமக்கு ஒருவர்" என்று அறிவுறுத்தும் நிலையை இன்று நாம் பார்க்க முடிகிறது. எதிர்காலத்தில் "நாமே குழந்தைகள் நமக்கேன் குழந்தைகள்" என்ற நிலை வரலாம்.

**மக்கள் வெள்ளத்திற்கு அணைபோடப்படும்!**

**(எ. இ. ப. 65)**

எதிர்காலத்திலும் மக்கள் தொகையைக் கட்டுப்பாடு செய்ய அரசாங்கம் தீவிரமாக முயலும். இத்தகைய கட்டுப்பாடு செய்ய முனைவதால் எதிர்கால சமூகத்தில் மனிதாபிமானம் அழிந்து போகலாம்.

### ஆட்சி மாற்றமும் அடிமைத்தனமும்

நம் நாட்டில் மன்னர் ஆட்சி முறை மாறி, மக்களாட்சி முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இனி வரும் காலங்களில் இராணுவ ஆட்சி நடைபெறும் என்பதை,

**நாட்டின் இறையாண்மையைப்**
**பன்னாட்டு இராணுவம் காக்கும்!**
**இந்நாட்டு மன்னர்கள் பன்னாடுகளில்**
**கொத்தடிமையாய் நோகும்!**
**நம் நாடு வல்லரசாகும்! நம் மக்கள்?...**

**(எ. இ. ப. 65)**

என்ற கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன. நம் நாட்டு மன்னர்கள் பன்னாட்டு

இராணுவ ஆட்சியிலே கொத்தடிமைகளாய் இருப்பார்கள். நாடு வல்லரசாக மாறிவிடும். ஆனால் நம் நாட்டு மக்களின் நிலை கேள்விக்குறியாகும்.

## முடிவுரை

எதிர்காலத்தில் அறிவியல் கருவிகளின் பயன்பாடு ஒருபுறம் அதிகம் இருந்தாலும் மறுபுறம் மக்களின் வாழ்க்கைமுறையில் பல்வேறு மாற்றங்கள் வர இருக்கின்றன. இயற்கை பற்றிய அடிப்படை அறிமுகம்கூட இல்லாத புதிய தலைமுறையினரின் நிலை, குடிநீரை டாப்-அப் மூலம் பெறுவது, சுவாசிப்பதற்குரிய காற்றைச் சிலிண்டர்களில் அடைத்து விலை கொடுத்து வாங்குவது போன்ற மாற்றங்களை நாம் எதிர்கொள்ள இருக்கிறோம். இவைதவிர வரலாற்றில், வழிபாட்டில், தொழிலில் என்பன போன்றவற்றிலும் பல மாற்றங்கள் வர இருப்பதை ஆசிரியர் கி.பி.3000 கவிதையின் வாயிலாக பதிவு செய்துள்ளார்.

## குறிப்புகள்

1. சிவகாமி, தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல், ப. 8
2. மேலது., ப. 5

## துணை நின்ற நூல்கள்

1. கந்தகக்கவி பாண்டூ, எட்டுக்காலியும் இருகாலியும், கந்தகப்பூக்கள் பதிப்பகம், சிவகாசி, 2015
2. சிவகாமி. ச., தமிழ் இலக்கியங்களில் எதிர்காலவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.